

J.M.Garg. 2008 Creative Commons Attribution-Share Alike 3.0 Unported

## தையல்சிட்டு பறந்து சென்ற பின்

தையல்சிட்டின் கனம்தான்
இருக்கும்
இந்தக் கணம்

அதிர்ந்துகொண்டிருக்கிறது
அது
தையல்சிட்டு பறந்து சென்ற பின்
அதிரும்
இலைக்காம்புபோல

*25.08.10*

## இந்தக் கணத்தின் நிறம் நீலம்

தளும்பத் தளும்பப் பொங்கும் நீலம்
சிறகிலிருந்து நூலாய்ப் பிரியும்
ஒளியும் நனைய காற்றும் நனைய
பெய்யும் மழையின் பெயர் நீலம்

நுரைத்து நுரைத்து அலைகள் பாய்ந்து
தெறிக்கும் துளியில் ஒளியும் ஏறி
விரியும் வில்லில் தொடங்கும்
இந்த ஆற்றின் பெயர் நீலம்

கரையக் கரையப் பறந்து சென்று
முடியும் புள்ளியில் மூழ்கும் மீன்கொத்தி
அலைகள் தோன்றி அதிரும்
இந்தக் கணத்தின் நிறம் நீலம்

*09.04.10*



Karunakar Rayker, 2010 Creative Commons Attribution 2.0 Generic

## கொண்டலாத்தி

விசிறிக்கொண்டை
ஒய்யாரி
சிறகு விரித்தால்
சிங்காரி

பறக்கும் அழகென்னெ
நடக்கும் பவிசென்ன
போயும்போயும் தின்பாளே
புழுவைத் தரையில் கொத்தியே

*18.04.10*



K.Gnanaskandan

## பெயர்களின் பயனின்மை

உனக்குப் பெயர்கள் ஓராயிரம்
ஓராயிரம் மொழிகளில்

இருந்தும் உனக்குத் தெரியாது
உன்னுடைய பெயர்
என்னவென்று

பெயர் தெரிந்து என்ன பயன்?

உன்னுள் கிடையாது
உனக்கென்று ஒரு பெயர்

எனக்குத் தெரியும்
என்னுள்ளும் கிடையாது
எனக்கென்றொரு பெயர்

நீ வரும்போதெல்லாம்
என்மேல் படிந்திருக்கும் பெயரை
உறிஞ்சிக் குடித்துவிட
நாமிருவரும் ஒன்றாகிறோம்
ஏற்கனவே நாம்
ஒன்றாயிருப்பதுபோலவே

*30.06.10*



K.Gnanaskandan



K.Gnanaskandan

## பருந்து

இப்படியும் அப்படியும் இருபுறமும் தலைதிருப்பிச்
செப்படி வித்தை செய்யும்-அப்படியே
அசைவற்று ஆகாயம் அளக்கும் ஆங்கே
பசைபோட்டு ஒட்டிய பருந்து

*21.08.10*